THIRU G. KRISHNAMOORTHY: Has any representation come that after fifteen years of service, those pandits who have practically reached the maximum in the B.T. Scale, should be given the first grade scale ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** அந்தத் தகுதி ஆராயப் படுகிற நிலைமையில் இல்லை.

### BUS SERVICE TO IRUMBADI VILLAGE

*224 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Works be pleased to state ?

(*a*) the reasons for the stoppage of the regular bus service to Irumbadi village near Solavanthan of Madurai district for one month prior to October 1967;

(*b*) whether the road leading to Irumbadi village has become completely unfit for transport service ; and

(*c*) if so, the reason for not repairing the road ?

### இரும்பாடி கிராமத்திற்கு பேருந்துகள்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) மதுரை மாவட்ட சோழவந்தானையடுத்த இரும்பாடி என்னும் ஊருக்கு வழக்கமாகப் போய்க்கொண்டிருந்த பஸ்கள் யாவும் சென்ற அக்டோபர் 1967-க்கு முன்பு ஒரு மாதமாக போகாத காரணம் என்ன ?

(இ) அந்த இரும்பாடி என்னும் ஊருக்குப் போகும் சாலை முழுதும் போக்கு வரத்துக்கு உதவாமல் போய்விட்டதா ?

(உ) ஆமெனில் மராமத்து செய்யாத காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 1967, அக்டோபரில் இச்சாலை யில் 2 மைல் 4 பர்லாங் நீளத்திற்குச் சல்லி போடும் பணி நடந்தது. எனவே இப்பணி நடந்துகொண்டிருந்த காலப் பகுதியில் இச்சாலையில் பேருந்துகள் செல்ல இயலவில்லை.

(இ) and (உ) இரும்பாடிக்குச் செல்லும் சாலையின் நீளம் முழுவதும் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பேணப்பட்டு வருகிறது.

### *Free supply of tools*

*225 *Q.*—THIRU M. AIYASWAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government have ordered the stoppage of the free supply of tools this year to washermen and barbers : and

(*b*) if so, the reason therefor ?

### இலவச தொழிற் கருவிகள்

**திரு. எம். அய்யாசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சலவையாளர்களுக்கும், முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கும் ஆண்டுதோறும் இலவசமாகத் தொழிற் கருவிகள் வினியோகிப்பதை இவ் வாண்டு நிறுத்தி வைக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா ?

(இ) அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

8th March 1968]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.
(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர்களுக்கும் முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு தொகை சர்க்காரால் வழங்கப்படுகிறது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சலவைத் தொழிலாளர்களுக்கு இஸ்திரி பெட்டிக்கு 50 ரூபாயும், வெள்ளாவி பானை வாங்க 60 ரூபாயும் ஆக 110 ரூபாய் வழங்கப்படுகிறது. அது மாவட்டத்திற்கு 60 சலவைத் தொழிலாளர்கள் என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு 53 ரூபாய் விகிதம், 60 தொழிலாளர்களுக்கு மாவட்ட ரீதியாக அளிக்கப்பட்டு வருகிறது. சென்னைமா நகரில் இந்த உதவிகள் தரப்படவில்லை.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவரவர்களே, அண்மையிலே நடைபெற்ற, பிற்பட்ட நல ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் இவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியம் அதிகமாக்க வேண்டுமென்று கேட்டதாகவும், அமைச்சர் அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டதாகவும், கேள்விப்பட்டேன் அவ்வாறு சொல்லியிருந்தால் அரசாங்கம் அதற்கு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவ்வாறு குறிப்பிடவில்லை சலவைத் தொழிலாளி மக்களுக்குத் தரப்படுகிற அந்த பெட்டி 53 ரூபாய் விலையில் இருப்பது மிகவும் சிறியதாக இருக்கிறது. அவர்கள் பெரிய பெட்டியாக விரும்புகிறார்கள். இப்போது தரப்படுகிற சிறிய பெட்டி தையல் தொழிலாளர்களுக்குத்தான் உபயோகமாகும். பெரிய பெட்டியாகவும், இப்போது தரப்படும் பானை மிகவும் பழையதாக இருப்பதால் அதையும் இன்னும் சற்று புதிதாகத் தரவேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது. அது இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். எத்திராஜுலு :** தலைவரவர்களே, நல்ல வேளையாக முதலமைச்சர் அவர்கள் இப்போதிருக்கிறார்கள். அவர்களுக்குக் கோரிக்கையாகவும், கேள்வியாகவும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் சர்க்கார் இருக்கும்போது 5, 6 வருடங்களுக்கு முன்னால் சலவைத் தொழிலாளர்களுக்கு 55 ரூபாய் இஸ்திரி பெட்டிக்கும், சவரத் தொழிலாளர்களுக்கு 50 ரூபாயும் 5 வருட கடனில் கொடுக்கப்பட்டன. பின்னால் படிப்படியாக என்னுடைய வற்புறுத்துதலின்பேரில், தமிழக முதல் அமைச்சர் அவர்கள் இதை இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில், சென்ற ஆண்டிலிருந்து இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப் பின்பற்றி இந்த அரசும் கொடுத்து வருகிறது. ஆனால், 5, 6 வருடங்களுக்கு முன்பு கடனாகக் கொடுத்த ரூபாய் இப்போது அதிகாரிகளால் கெடுபிடி செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதை விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை வசூலிக்க வேண்டாமென்றும், ரொம்பவும் குறைந்த தொகை, விட்டுக் கொடுங்கள் என்றும் கேட்டுக்கொள்கிறேன் நமது முதலமைச்சர் அவர்கள் உடனடியாகப் பதில் சொல்லக் கூடியவர். எதுவும் இதற்கு ஆட்சேபணை இருக்க முடியாது. உருக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். அதை வசூலிக்காமல் விட்டுவிடுங்கள் என்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, நண்பருடைய உருக்கமான வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

**MR. CHAIRMAN :** Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் *தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]